பெறுநர். 06.07.2017

தலைமைப்பொறியாளர் / பகிர்மானம் / ஈரோடு மண்டலம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ஈரோடு

ஐயா,

பொருள் : தமிழ்நாடு மின்வாரியம் - விநியோகம்,அனல், புனல் உற்பத்தி மற்றும் பொதுநிர்மான வட்டங்களில் செலவினப்பகுதி மற்றும் நிர்வாகப்பிரிவுகளில் பணிப்பகிர்வு- பணியாளர் எண்ணிக்கை - வரைமுறை படுத்துதல் - சம்மந்தமாக.

பார்வை : Per (CMD) TANGEDCO Proceedings No.145, Secretariat Branch, dated 06.06.2017.

--------

பார்வையில் காணப்படும் வாரியஆணையில், தமிழ்நாடுமின்வாரியத்தின் விநியோகம், அனல், புனல், உற்பத்தி மற்றும் பொதுநிர்மான வட்டங்களில் செலவினப்பகுதி மற்றும் நிர்வாகப்பிரிகளில், பணிப்பகிர்வும், பணியாளர் எண்ணிக்கையையும் வரைமுறை படுத்துவது சம்மந்தமாக, தங்களின் சீரிய தலைமையில், உயர் அலுவலர்களைக்கொண்ட குழு அமைத்திருப்பதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

மேற்கண்ட பணிகள் தொடர்பாக தாங்கள் பல்வேறு விவாதங்கள், ஆய்வுகள் மேற்கொண்டு, ஒவ்வொரு அம்சத்தையும் தீவிரமாகப் பரிசீலித்து வாரியத்திற்கு பரிந்துரை செய்து, நிர்வாக நலன், தொழிலாளர் நலன், பணியாளர் நலன் முதலியவை மேம்படும் வண்ணம் அறிக்கை சமர்ப்பிப்பீர்கள் என்று நம்புகிறோம்.

இது சம்மந்தமாக எங்களது சங்கத்தின் சார்பில் மூன்று துணைக் குழுக்கள் அமைத்து செலவினப் பகுதி, நிர்வாகம், அனல், புனல், உற்பத்தி வட்டங்கள் மற்றும் பொதுநிர்மான வட்டங்கள் ஆகியவற்றிற்கான பணிப் பகிர்வு மற்றும் பணியாளர் எண்ணிக்கை குறித்து ஆய்வுசெய்து, அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அறிக்கைகளை இக்கடிதத்துடன் இணைத்துள்ளோம்.

தங்களது விவாதங்கள் மற்றும் ஆய்வுகளில் நாங்கள் சமர்ப்பித்துள்ள அறிக்கைகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, தங்களது பரிந்துரையை இறுதி செய்திடுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றியுடன்,

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

இணைப்பு : 3 அறிக்கை நகல்கள்.